# விடியல்

பருவ கால இதழ்

வேனில் : 01 | வைகறை : 01 | 2014 தை – சித்திரை

### வெளியீட்டுக் குழு

காப்பாளர்:
திரு.அ.கயிலாயபிள்ளை
(அதிபர்)

ஆலோசனை:
திரு.ந.பாலச்சந்திரன்
(பிரதி அதிபர் - நிர்வாகம்)
திரு.த.பாலசண்முகநாதன்
(பிரதி அதிபர் - கல்வி)

இணைப்பாளர்:
திரு.க.முத்துலிங்கம்

ஆசிரியர்:
திருமதி.மீ.பாரதி

கணினி வடிவமைப்பு:
திருமதி.க.நளாயினி
திருமதி.மீ.பாரதி

### உள்ளே ....

- ஆசிரியர் இதயம்
- கவிதை விமர்சனம்
- நூல் அறிமுகம்
- அறிந்து கொள்வோம்
- தமிழ் அறிவு
- காட்சியும் கவியும்

## குறள் அமுதம்

**"நவில் தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்**

**பண்புடை யாளர் தொடர்பு"** (குறள் : 783)



நல்ல பண்புடையவர்களால் இந்த உலகம் வாழ்கின்றது. நல்ல பண்புடையவர்களின் நட்பை திருவள்ளுவர் கூறும் போது மிகச்சிறந்த உவமையைக் கொண்டு விளக்குகின்றார். அதாவது நல்ல நூல் கற்கக் கற்க மேன்மேலும் இனிமை தரும். அதுபோலவே பண்புடையவரின் தொடர்பும் பழகப் பழக மேன்மேலும் இன்பம் தரும் என்கிறார்.

'இந்த உவமை நட்பின் பெருமையை விளக்குவதோடு நிற்காமல் இலக்கியக் கலையின் சிறப்பையும் விளக்குகின்றது' என்கின்றார் "திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்" செய்த டாக்டர் மு.வரதராசன் அவர்கள். மேலும் நல்ல நூல் முதல்முறை கற்கும்போது தரும் இன்பத்தைவிட, பலமுறை கற்கக் கற்கச் சிறந்த இன்பம் தரும் என்னும் உண்மையையும், வாழ்க்கையில் நல்ல நண்பர் செய்யும் நன்மைகளை நல்ல நூலும் செய்ய வல்லது என்னும் உண்மையையும் புலப்படுத்துகின்றது. அறிவிலும் நெஞ்சத்திலும் தெளிவையும் அன்பையும் வளர்க்கும் நூல் போல் நண்பருடைய தொடர்பு அறிவையும் நெஞ்சத்தையும் பண்படுத்த வல்லதாக இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து.

* * *

மாணவர்களிடையே வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் வெளியாகும் குறுஞ் சஞ்சிகை

# கனவுகளைச் சுமக்கின்ற மாணவரா? அன்றேல் .......

திருமதி.மீ.பாரதி

தொல்லை தரும் பிறவி
சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து அமுதூட்டி
எல்லையிலாக் கனவுகளை
மனதிருத்தி ......
இன்னமும்
இனிதாய்ப் படிக்க
என்னென்ன தேவைகளோ
அத்தனையும் உமக்கூட்டிப்
பள்ளிக்கு அனுப்பி வைக்கும்
உம் பெற்றோர்
கனவுகளைச் சுமக்கும் மாணவரா?
அன்றேல் ... கனவுகளைப்
பொசுக்கும் ...

*

எதிர்கால மானிடச் சிற்பிகளே!
பண்பாடும் பழமையும்
பரிமளிக்கும் இப்பூமி
கல்வியிலும் கலைகளிலும்
களித்து நின்ற செய்தி எல்லாம்
பொய்யென்று உரைத்து
புண்ணாக்கிட வேண்டாம்.

*

வாழ வகையின்றி
வாழிடங்கள் ஏதுமின்றி
ஏதிலியாய் வந்தவரை
நாடி அழைத்து
நயமுடனே துயர்துடைத்து
குடிமனை முதலாக
கொடுத்துப் புரந்த கதை
உம் பெற்றோர்
உமக்கேதும்
உரைத்திடவில்லையோ?

*

கூவிவரும் ஷெல் மழையும்
குவிந்து வரும் வெடி மழையும்
சேர்ந்து வந்த பொருட் தடையும்
ஆம்
வேண்டுமென்றே
எமைப் பூண்டோடு அழிக்க
நடந்த போர்களும்
இரத்தமும் சதையுமாக
தாம் பட்ட கஷ்டத்தை
கதையோடு கதையாய்க்
கூறலையோ?
உம் பெற்றோர்.

*

பால்மாக்கும் சீனிக்கும்
கோதுமை மாவுக்கும்
மண்ணெண்ணை சோப்புக்கும்
வழியின்றி வந்தபோதும்
பங்கருக்குள் மெழுகுதிரி
மெதுவாக ஏற்றிவைத்து
கல்வியே கதி என்று
கற்ற கதை கூறலையோ?

*

இத்தனைக்கும் மத்தியிலே
இனியதாம் கல்வி கற்று
பெற்ற பதவியிலே
பெரிதுவந்து சொத்துக்கள்
அத்தனையும் சேர்த்து
உமைப் பெற்றெடுத்து
கல்வியூட்ட
நீரோ
என்ன செய்தீர்?

*

வயிறாறச் சாப்பிட்டு
ஏப்பம் விட்டு
கலர் கலராய் உடையணிந்து
கம்பியூட்டர் இன்ரநெற்
பேஸ்புக் ருவிட்டர் என்று
எத்தனை பொழுதுபோக்கோ
அத்தனையும் அனுபவித்து
என் செய்தீர்?

*

கட்டுக் கட்டாய் காசைக்
கடவுளுக்கும் காட்டாது
உம் கல்விக்கு
கொட்டிவிட்ட பெற்றோர்
முகத்துக்கு என் செய்தீர்?
*
கொப்பிக்கும் பேனைக்கும்
அடிக்கின்ற போட்டோ
கொப்பிக்கும்
உண்ணாண
மணிக்கணக்கில் பேர்ஷனல்
வகுப்புக்கும் கொடுக்கின்ற
பணத்துக்கும்
என் செய்தீர்?
*
இத்தனைக்கும்
பள்ளி நேரத்தில்
பாடத்தைக் 'கட்' பண்ணி
பாதிநேரம் நூலகத்தில்
பம்பலாய் பக்கம் பழுதாக்கி
மீதி நேரத்தில்
கற்பிக்கும் ஆசானைக்
குறை சொல்லி
வீட்டுப் பாடங்களை
விலக்கி வைத்து
மேலதிக வகுப்புக்களைப்
புறம் தள்ளி .......
இன்னும்
பயிற்சிப் பரீட்சை தானும்
பயபக்தியுடன் எழுதுவதா?
ஆளின்றிப் படிக்கும்
பாடத்தைக் கூட
ஆயிரம் முறை படிப்பித்தும்
ஏன் ஏறாது போனதுவோ?
*
மாணவரே விழித்துக் கொள்ளும்
பெற்றோரின் கனவுக்கும்
சிந்துகின்ற வியர்வைக்கும்
நீவிர் பதில் சொல்லும்.
நல்லோர் மதிக்கின்ற பிள்ளைகளாய்
ஆசான் மனம் போற்றுகின்ற
மாணவராய்
போதைகளைச் சுட்டெரிக்கும்
சூரியராய்
அவனியிலே நடமாட
இன்றே திடம் கொள்ளும்
இனிதே கற்றோங்கும்.
* * *

**வாசிப்பு என்பது மனனம் செய்து ஒப்புவித்தல் அல்ல**

**வாசித்ததை கிரகித்தலே சிறந்த வாசிப்பு ஆகும்.**

*திரு.க.முத்துலிங்கம்*

கிழக்கு வெளிக்கிறது

கீழ்வானம் சிவக்கிறது

**விடியல்** மலர்கிறது

உயிரினம் விழிக்கிறது.



சி.சோபனா - $11^D$

# 'அலங்காரம்' - அப்துல் ரகுமான்

நாடறிந்த நற்றமிழக் கவிஞரும் பல்துறைப் புலமையாளரும் உரை வீச்சில் வல்லவருமான கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் 'அலங்காரம்' என்னும் கவிதை, விமர்சனத்திற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இக்கவிதை கவிஞரின் 'ஆலாபனை' என்னும் நூலில் வெளிவந்துள்ளது.

வானிலே எத்துணை தாரகைகள் தரணிக்கு ஒளி கொடுத்தாலும் சந்திரனின் தன்ணொளி எவ்வாறு மனதை வருடுகின்றதோ, அவ்வாறு இக்கவிதை நூலில் உள்ள ஏனைய கவிதைகளை விட நிலவாக என்மனதை இக்கவிதை ஈர்த்து விட்டது.

எண்ணத்தையும் உணர்ச்சியையும் உரிய முறையில் பிறர் உளம் கொள எடுத்துரைக்கும் போதுதான் படைப்பாளியின் கவித்திறன் நன்கு புலனாகும்.

"எண்பொருளவாகச் செலச்சொல்லித் தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு"

என்றார் வள்ளுவர்.

அரிய பொருளினை எளிமையாக சொல்வதும் பிறர் கூறும் நுட்பமான பொருளை உணர்ந்து கொள்ளுதலுமே நுட்பமான அறிவாகும். உணர்த்தும் திறனும் உணரும் திறனும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் அப்துல் ரகுமான் என்பதற்கு அவரது அலங்காரம் என்னும் இக்கவிதை சான்றாகிறது.

கவிதையின் ஆரம்பித்திலேயே தன் வாசகரின் மனதில் இடம்பிடிப்பதற்காகப் பல நாட்கள் சிந்தனை செய்து இவ்வரிகளைத் தொடுத்தார் போலும்

"கொடிகள் சொந்தப் பூக்களால்
தம்மை அலங்கரித்துக் கொள்கின்றன
மனிதன் தன்னை அலங்கரித்துக் கொள்ளப்
பூக்களை விலைக்கு வாங்குகின்றான்"

காந்தம் போல் என் மனதை ஈர்த்த இவ் வரிகளைத் தொடுத்த அப்துல் ரகுமான் ஓர் சிறந்த தச்சன். எதையும் எளிதாகவும் துல்லியமாகவும் செய்து முடிக்கும் அவர் கைகள், அலங்காரம் என்னும் கவிதை வீட்டிற்கான அத்திவாரத்தினை மிகப் பலமாக போட்டு விட்டன.

எம்மைச் சூழவுள்ள இச்செடி கொடிகளை யாராவது அழகுபடுத்துகின்றார்களா? இல்லையே தாமாகவே பூத்துக் குலுங்கி அவை மிக அழகாகத் திகழ்கின்றன. வானமானது தன் சொந்த நட்சத்திரங்களால் தன்னை அலங்கரித்துக் கொள்கின்றது. ஆனால் மனிதன் தன்னை அலங்கரித்துக் கொள்ள பூமியிடமிருந்து நவரத்தினங்களைத் திருடுகின்றான். பாலானது தன் ஆடையைத் தன்னிலிருந்தே தயாரித்துக் கொள்கின்றது.

ஆனால் மனிதனோ பருத்தியிடம் கடன் கேட்கின்றான். இவை அனைத்தும் கவிஞரின் கவிதை சொல்வன.

கவிஞரின் மனிதன் மீதான ஆதங்கம் இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது. இச்செடி கொடிகள், வானம், பால் ஆகிய யாவுமே இயற்கையின் இனிய படைப்புக்கள். இவற்றைப் போல மனிதனும் இயற்கையின் ஓர் இனிய படைப்பாவான். ஆனால் இவற்றுக்கும் மனிதனுக்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி உள்ளது. ஆம் மனிதனைத் தவிர மற்றைய அனைத்தும் சுயமாக வாழ்கின்றன. ஆனால் மனிதனோ ஏனையவற்றில் தங்கியிருக்கின்றான். அன்று ஆடைக்காக பருத்தியிடமும் இரத்தினங்களுக்காகப் பூமியிடமும் அழகுப் பூக்களுக்காகச் செடிகளிடமும் திருடிய மனிதன் இன்று உல்லாச வாழ்வுக்காகப் பணத்தினைத் திருடுகின்றான். இந்நிலை மாற வேண்டும் என்பதே கவிஞரின் நோக்காகும்.

"நீ சுய மரியாதை உடையவனாக இருந்தால் உன்னுடைய ஆடையை உன்னிலிருந்தே உருவாக்கு" என்கின்றார் கவிஞர். இன்றைய மனித வர்க்கத்தினரைச் சிந்திக்கத் தூண்டும் வரிகளாக இவ் வரிகள் அமைகின்றன.

மனிதனிடம் இருக்கும் குற்றங்களைச் சுட்டிக் காட்டிய பின் கவிதையின் எஞ்சிய பகுதியில் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என முன்வைக்கின்றார். எம் தலையை மகுடங்களுக்குப் பதிலாக புகழால் அலங்கரிக்க வேண்டும். ஏனெனில் மகுடங்கள் தலைமாறக் கூடியவை. எம் நெற்றியை திலகத்திற்குப் பதிலாகச் சிந்தனையால் அலங்கரிக்க வேண்டும். ஏனெனில் திலகம் கலையக் கூடியது. எம் கண்களை மையால் அலங்கரிப்பதற்குப் பதிலாக இரக்கக் கண்ணீரால் அலங்கரிக்க வேண்டும். ஏனெனில் மை கரையக் கூடியது. எம் செவிகளை, தோடுகளை விடுத்து கேள்வியால் அலங்கரிக்க வேண்டும். ஏனெனில் தோடுகள் திருட்டுப் போகக் கூடியவை. எம் உதடுகளைச் சாயத்திற்குப் பதில் உண்மையால் அலங்கரிக்க வேண்டும். ஏனெனில் சாயம் வெளுத்துப் போகக் கூடியது. எம் தோள்களை மாலைக்குப் பதில் வீரத்தாலும், எம் கைகளை மருதாணிக்குப் பதில் ஈகையாலும் அலங்கரிக்க வேண்டும். ஏனெனில் மாலைகள் வாடக் கூடியவை, மருதாணி மறையக் கூடியது. இவற்றிலிருந்து என்ன தோன்றுகின்றது? நாம் அழகென இவ்வுலகில் நினைக்கும் எதுவுமே அழகல்ல. **"குஞ்சி அழகும் ...."** என்னும் நாலடியார் பாடல் நம் மனக்கண் வருகின்றது.

இக்கவிதையை வாசிக்கும் அனைவர் மனதிலும் எம்மை விட ஓர் பெருத்த பலசாலியாக இயற்கை இருக்கின்றது என்ற எண்ணம் வேரூன்றி விடும். இத்துணை நாளும் நாம் மிக அழகாக இருக்கின்றோம் என்று எண்ணியவர்கள் தம்மைக் குறைத்து மதிப்பிடத் தொடங்குவர். உலக உண்மை உள்ளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்பட்டுத் தோன்றும். காலம் என்னும் ஆழியிலும் காற்று மழை ஊழியிலும் சாகாமல் இருக்கும் ஆற்றல் வேறு எந்த அலங்காரங்களுக்கும் இல்லை. கல்விக்கே உண்டு என்னும் உண்மை புரியத் தொடங்கி விடும். இவை அனைத்தும் என்னுள் எழுந்த உணர்வுகள். இக்கவிதையை வாசிக்கும் அனைவர் மனதிலும் எழப்போகும் உணர்வுகள் எத்தகையனவோ? நீங்களும் கவி சுவைத்து, செய்யுங்கள் உண்மை அலங்காரம்.

* * *

## நூல் அறிமுகம்

# 'செ.கணேசலிங்கன் நாவல்கள் ஓர் ஆய்வு'




நூலாசிரியர் : அமிர்தலிங்கம் பௌநந்தி.

வெளியீடு : குமரன் புத்தக இல்லம்.

ஈழத்தின் தலைசிறந்த நாவலாசிரியர்களுள் ஒருவரான செ.கணேசலிங்கன் அவர்களை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். செ.கணேசலிங்கன் அவர்கள் யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் சைவ வேளாளர் குலத்தில் 1928 ஆம் ஆண்டு செல்லையா இராசம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர். யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட இறுக்கமான சாதியமைப்பைக் கண்டு மனம் நொந்து தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக தமது எழுத்துக்களைப் பொறித்தவர்.

நீண்ட பயணம், சடங்கு, செவ்வானம், விலங்கில்லா அடிமைகள், உலக சந்தையில், போர்க் கோலம், தாய் வீடு என நாற்பதுக்கு மேற்பட்ட நாவல்களைத் தந்தவர். அவருடைய நாவல்களை அமிர்தலிங்கம் பௌநந்தி அவர்கள் ஆய்வு செய்து, 'செ.கணேசலிங்கன் நாவல்கள் ஓர் ஆய்வு' எனும் பெயரில் வெளியிட்டுள்ளார். இந்நூலில் க.பொ.த உ/த தமிழ்ப் பாடத்திற்குள் அமையும் நீண்ட பயணத்தின் ஆய்வும் இடம்பெற்றுள்ளது என்பதனை எமது மாணவர்களுக்கு அறியப்படுத்த வேண்டிய கடப்பாடு எமது நூலகத்திற்கு உள்ளது.

இந்நூல் சாதியம், பெண் நிலை நோக்கு, பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றை மையப்படுத்தி மிகத் துல்லியமாக ஆராய்கிறது. இந்நூலைப் பயன்படுத்தும் மாணவர்கள் நாவல் தொடர்பான வினாவை முழுவிளக்கத்தோடு எதிர்கொண்டு உயர்ந்த புள்ளியைப் பெறும் வல்லமையினைப் பெறுவர் என்பது திண்ணம். இந்நூல் எமது நூலகத்தில் புதுவரவாக உள்ளது. வாசித்துப் பயனடையுங்கள்.

* * *

## நூல் அறிமுகம்

# 'ஈழத்து தமிழ் நாட்டுப்புறக் கதைகள்'




நூலாசிரியர் : கலாநிதி கி.விசாகரூபன்.

வெளியீடு : மலர் பதிப்பகம், கந்தர்மடம்.

நமது பண்பாட்டின் ஓர் அம்சமாக விளங்கும் "பாட்டி கதை சொல்லல்" மெல்ல மெல்ல விலகி, இன்று பாட்டி என்ற சொல்லே ஔவையாருடன் மட்டும் நின்று உறவாடுகின்றது. அந்நிலையில் நாட்டுப்புறக் கதைகளைக் கேட்கவோ, சொல்லவோ யாரும் இல்லாத பொழுது எமக்கெல்லாம் அரும் பொக்கிஷமாகக் கிடைத்த நூலே "ஈழத்து தமிழ் நாட்டுப்புறக் கதைகள்" யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் அவர்களால் தொகுக்கப்பட்ட இந்நூல் பாட்டியே எதிரே வந்து கதை கூறுவது போன்ற உணர்வோடு வாசித்துப் பயனடையும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் நாற்பது நிமிட பாட வேளையில் நூலகத்திற்கு வந்து எதைப் படிப்பது எனத் தெரியாது பக்கம் புரட்டி அரைகுறையோடு வாசித்தவற்றை விட்டுச் சென்று மீண்டும் அதனை தொடர வாய்ப்பின்றி ஏங்கும் மாணவர்கள் இந்நூலை எடுத்து வாசிப்பார்களேயானால் நாற்பது நிமிடத்தில் குறைந்தது பத்துக் கதைகளாவது அவர்களுக்கு விருந்தாகக் கிடைக்கும். தெய்வக் கதைகள், பேய்க்கதைகள், மந்திரக்கதைகள், மனிதப் பண்புக்கதைகள், அரச கதைகள், விலங்குக் கதைகள் எனத் தனித்தனியாக தொகுக்கப்பட்டுள்ள இக்கதைகளை மாணவர்கள் தமது சுவைக்கேற்ப வாசித்துப் பயன் பெற வேண்டும் என்ற நோக்கில் இந்நூல் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இந்நூல் எமது நூலகத்தில் புதுவரவாக உள்ளது. வாசித்துப் பயனடையுங்கள்.

* * *

நூல் அறிமுகம்

# 'கம்பனின் கைபிடிப்போம்'



தொகுப்பாசிரியர் : க.நடேஸ்வரன்.

வெளியீடு : தென்மராட்சி இலக்கிய அணி.

தமிழ் இலக்கியத்தின் பெருஞ் சொத்தாக மதிக்கப்படுகின்ற பேரிலக்கியமாகத் திகழ்வது கம்பராமாயணம். இன்றைய மாணவர்கள் கம்பனையும் கம்பராமாயணத்தையும் எவ்வளவு தூரம் அறிந்திருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இராமாயணக் கதைகள் ஏராளம். இவர்கள் நூல்களை வாசிப்பதை விட நவீன நாடகங்கள், திரைப்படங்கள், திரைத் தொடர்கள் மூலமே இராமாயணக் கதைகளை அறிந்து வைத்திருக்கின்றனர். தாம் அறிந்த இராமாயணக் கதைகளை கம்பராமாயணம் என எண்ணி வாதிடுகின்றனர். மாணவர்களின் இந்த விபரீத ஐயங்களைத் தீர்க்க தென்மராட்சி இலக்கிய அணியின் வெளியீடான கம்பனின் கைபிடிப்போம் என்னும் நூல் பெரிதும் உதவுகின்றது.

தமிழ்ப் பண்பாட்டின் மணம் கமழ கம்பன் தந்த இராமாயண பாத்திரங்களை மாணவர்கள் இரசித்து சுவைக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. நூலின் கண் 'கம்பன் சிறப்பும் அறமூர்த்தி அன்னான் தசரதன், கேகயன் மாது கைகேயி, நடையில் நின்றுயர் இராமன், பங்கமில் குணத்தன் பரதன், தவமிருந்த தவமாம் தையல் சீதை, தீராக் காதலன் குகன், கூற்றையும் ஆடல் கொண்ட கும்பகர்ணன், புகழுக்கும் இறுதி காணா இராவணன் முதலிய உயர் பாத்திரங்களை இலக்கிய நயம் சொட்ட கம்பராமாயணத்தைப் பிழிந்தெடுத்து எமக்கு ஊட்டுகின்றனர், தென்மராட்சி இலக்கிய அணியினர். எமது பிரதேசத்தில் கால்பதித்த இந்நூல் எமது நூலகத்தில் புதுவரவாக உள்ளது. வாசித்துப் பயனடையுங்கள்.

* * *

## அறிந்து கொள்வோம்

- **பெண்களின் ஏழு பருவங்கள்**

பேதை - 5 தொடக்கம் 7 வயது வரை
பெதும்பை - 8 தொடக்கம் 11 வயது வரை
மங்கை - 12 தொடக்கம் 13 வயது வரை
மடந்தை - 14 தொடக்கம் 19 வயது வரை
அரிவை - 20 தொடக்கம் 25 வயது வரை
தெரிவை - 26 தொடக்கம் 39 வயது வரை
பேரிளம்பெண் - 40 வயதிற்கு மேல்

- **ஆண்களின் ஏழு பருவங்கள்**

பாலன் - 1 தொடக்கம் 7 வயது வரை
மீளி - 8 தொடக்கம் 10 வயது வரை
மறவோன் - 11 தொடக்கம் 14 வயது வரை
பிறலோன் - 15 வயது
காளை - 16 வயது
விடலை - 17 தொடக்கம் 30 வயது வரை
முதுமகன் - 30 வயதிற்கு மேல்

- **பூக்களின் ஏழு பருவங்கள்**

அரும்பு - அரும்பும் நிலை
மொட்டு - மொக்குவிடுநிலை
முகை - முகிழ்க்கும் நிலை
மலர் - மலரும் நிலை
அலர் - மலர்ந்த நிலை
வீ - வாடும் நிலை
செம்மல் - வதங்கும் நிலை

* * *

## தமிழ் அறிவு

அன்பான மாணவர்களே, எம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்குரிய இலக்கணத்தை நீங்கள் கற்றுக்கொண்டிருக்கின்றீர்கள். தமிழ்மொழியின் ஐந்திலக்கணத்தை அறிந்திருக்கின்றீர்களா? அவை எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பனவாகும்.

தமிழில் உள்ள இலக்கணநூல்கள் சில உங்களுக்காக.

### *இலக்கண நூல்களும் அதன் ஆசிரியர்களும்*

| | |
|---|---|
| அகத்தியம் | - அகத்தியர் |
| தொல்காப்பியம் | - தொல்காப்பியர் |
| நன்னூல் | - பவணந்தி முனிவர் |
| யாப்பருங்கலம் | - விசாகப்பெருமாள் ஐயர் |
| யாப்பருங்கல விருத்தி | - அமிர்தசாகரர் |
| யாப்பருங்கலக் காரிகை | - அமிர்தசாகரர் |
| புறப்பொருள் வெண்பாமாலை | - ஐயனாரிதனார் |
| நம்பி அகப்பொருள் | - நாற்கவிராச நம்பி |
| நேமிநாதம் | - புத்தமித்திரனார் |
| இறையனார் களவியல் | - இறையனார் |
| தண்டியலங்காரம் | - தண்டி |
| வீரசோழியம் | - புத்தமித்திரனார் |
| இலக்கணக்கொத்து | - சுவாமிநாத தேசிகர் |
| தொன்னூல் விளக்கம் | - வீரமாமுனிவர் |

## பிறந்த நாள் பரிசு

மாணவச் செல்வங்களே, உங்கள் பிறந்தநாளை அழகாக, அர்த்தமுள்ளதாகக் கொண்டாட எங்களோடு இணைந்து கொள்ளுங்கள். அறிவாற்றலை வளர்க்கும் சிறுநூல் ஒன்றை நூலகத்திற்கு அன்பளிப்பு செய்வதன் மூலம் "விடியல்" சஞ்சிகை ஊடாக வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# காட்சியும் கவியும் – 1



மாணவர்களே, இக்காட்சிக்குக் கிடைத்த தரமான கவிதைகள் மூன்று இங்கே பிரசுரமாகின்றன.

### உலக ஒற்றுமை

யுத்தங்களின் ஓய்வு
துப்பாக்கிகளின் மௌனம்
உலக தலைவர்களின் ஒன்றுகூடல்
அகதி வாழ்வின் அஸ்தமனம்
சமாதானப் புறாக்களின் ஊர்வலம்
சகஜ வாழ்வின் மலர்வு
சர்வதேச சகோதரத்துவம்
இத்தனைக்கும் திறவுகோல்
உலக ஒற்றுமை.

*நிஷாயினி, $10^E$*

### வேண்டும்

வைரம் பாய்ந்த
தோளும்
வலிமை வாய்ந்த
கரமும்
ஈரம் உள்ள
நெஞ்சும்
உலகைக் காக்க வேண்டும்.

*ர.யதீசன், $12T_2$*

### அழைப்பது கேட்கிறதா?

கைகொடு மகனே
காலம் காலமாய் உன் சந்ததியை
காத்த நான்
காலுடைந்து ஊனமாய்
காத்திருக்கின்றேன்
கல்லில் கசிவைப் போல் நெஞ்சில் ஈரம்
சுரக்க

என்னகத்துள் அக்கினி குழம்பின்
ஆக்கிரமிப்பு
சந்ததியாய்த தொடர்ந்து சுட்டெரித்த
போதும்
உன்மீது காட்டியதில்லை
துளி வெறுப்பை

நீ மட்டும் எனக்காய்
ஓடோடி வந்தால்
நான்கு கைகள் நாளை
நானூறு கைகளாகும்
எனக்காக அல்ல
உனக்காக எனைத் தாங்கு
எனது மரணத்தைத் தடுக்க அல்ல
மறுஜென்மத்தைக் கொடுக்க.

*தி.நவலாஜினி, $12^B$*

# காட்சியும் கவியும் - 2



*இக்காட்சி உங்கள் மனதில் பதிந்தால் அதற்குக் கவிவடிவம் கொடுங்கள். உங்கள் கவித் துளிகள் 8 அடிகளுக்கு உட்பட்டதாகவே இருக்கட்டும்.*

## நன்றியுடன் ...

எமது கற்றல் வள நிலையத்தின் வெளியீடாக இன்று 'விடியல்' எனும் இச்சிறு சஞ்சிகை நூலகப் பொறுப்பாசிரியர் திரு.க.முத்துலிங்கம் அவர்களின் வழிகாட்டலில் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. தவணைக்கு ஒருமுறை வெளிவர இருக்கும் இச்சிறு சஞ்சிகை கனதியுள்ளதாக அமைய உங்களின் சிறந்த நூல் விமர்சனங்களையும் ஆக்க விமர்சனங்களையும் எதிர்பார்த்து நிற்கின்றோம். நீங்கள் படிப்பவைகளுள் பிறருக்கும் பயன்படும் விடயங்களிருப்பின் அவற்றையும் விடியலுக்கு அனுப்பி வையுங்கள்.

இச்சஞ்சிகை யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி கற்றல் வளநிலையத்தின் நூல் வெளியீட்டுப் பிரிவினால் அச்சிடப்பட்டு 2014.02.21 ஆம் திகதி வெளியிடப்பட்டது.